

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மன்னவனூர் பகுதியில் சூழல் சுற்றுலா அமைப்பது குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு, அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். உடன் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கோ.காமராஜ் - இரா.நரேஷ்கண்ணா - எஸ்.கே.நெப்போலியன் - மு.ஸ்ரீதர் பங்கேற்பு!

# பம்மல் வடக்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் அறிவிப்பு! கே.சந்திரன் தலைமை!

காஞ்சிபுரம், மே 26-

பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதிக்கழகச்செயல்வீரர்கள் கூட்டம் இன்று (26.5.23-செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு குரோம்பேட்டை சி.எல்.சி. சாலையில் அமைந்துள்ள ஜி.பி.ஹாலில் பகுதி கழக அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமையில், மாவட்ட பிரதிநிதி எஸ்.கே. நெப்போலியன், பகுதி துணைச் செயலாளர்கள் மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, பகுதி பொருளாளர்ச.பிரபு,மாநகர பிரதிநிதிகள்சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், க. சுந்தரமூர்த்தி, இரா.பாபுஜி ஆகியோர் முன்னிலையில், தாம்பரம் மாநகர துணை மேயர்கோ.காமராஜ்,மாநகர துணைச் செயலாளர் இரா. நரேஷ்கண்ணா ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் செள.ஆரோக்கியராஜ், எஸ். லாசர், ந.முவேந்தன், க.

# திருப்பூர் வடக்கு மாவட்டம் – திருப்பூர் தெற்கு மாநகரம், வீரபாண்டி பகுதி, 54 வது வட்டம் - முத்தணம்பாளையம் பகுதி, 58வது வட்டம் ஆகிய - வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகரம், வீரபாண்டிபகுதி, 54வது வட்டச் செயலாளர் பி.கார்ச்சிக்குமார் அவர்கள், வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **திரு. ப.மோகன்ராஜ்** (2-588, நலேத்துத் தோட்டம், வீரபாண்டி, திருப்பூர்-5)அவர்கள், 54வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

முத்தணம்பாளையம் பகுதி, 58வது வட்டச் செயலாளர் வி.ஆர்.மனோகரன் அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **திரு. சா.ராஜேந்திரன்** (1/42, கே.செட்டிபாளையம், தாராபுரம் ரோடு, திருப்பூர்) அவர்கள், 58வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 25.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

அண்ணா நகர் தெற்கு பகுதி

# இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

சென்னை மே 26,

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதி, இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று 26-05-2023 மாலை 5 மணியளவில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் து. செல்வகுமார் தலைமையில் நடைபெற உள்ளது.

அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந. இராமலிங்கம் எம்.சி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் அண்ணா நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், இரா.நவிந்திரகுமார் ப.மகேஷ்ராஜா, கர்ணா (எ) தெ.கருணாநிதி, வி.எம். சிவா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேற்கண்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு அண்ணா நகர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர் வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு செல்வகுமார் கேட்டுக் கொள்கிறார்.

பொருள்: கழக ஆட்சியின் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க தெருமுனை கூட்டம், கழக ஆக்க பணிகள்.

பசுபதி, வட்ட கழக செயலாளர்கள் ப.அன்பழகன், க.மோகன், மு.நி. தமிழ்குமரன்,ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், தாம்பரம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு,வாணிஸ்ரீவிஜயகுமார், சித்ராதமிழ்குமரன், சண்முக சுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி, முரளிதரன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் சிறப்பு அழைப்பாளர்கள், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் வருகின்ற ஜூன்- 3 அன்று நமது உயிரனையதலைவர்முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக கொண்டாடுவது குறித்தும்,

ஜூன்-3 அன்று மாலை வடசென்னையில்நடைபெற உள்ள பிறந்தநாள் விழா பொதுக் கூட்டத்தில் பங்கு கொள்வது குறித்தும்,

ஜூன் -15 கலைஞர் மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்வது குறித்தும்,

ஜூன் -20 திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு விழாநிகழ்ச்சியில்பங்கேற்பது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் தெரிவித்துள்ளார்.

மாங்காடு நகர தி.மு.க.

# அவசரச் செயற்குழுக் கூட்டம்!

## பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மே.26 -

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகர தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் இன்று (26.5.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 7 மணிக்கு, மாங்காடு நகரகழக அலுவலகத்தில் நகர அவைத் தலைவர் எம்.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுபோது நகரக் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டுக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பா ளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

ஜூன் 3 அன்று கலைஞர் அவர்களின்நூற்றாண்டுவிழா மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சரின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம். திருவொற்றியூர் மத்திய பகுதி 18வது வட்டம், மற்றும் 20வது வட்ட கிளைக் கழகம் சார்பாக மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏ.வி.ஆறுமுகம் எம்.சி. சாலை கணேசன், த.வேல் கணேசன், வ.முத்துசாமி, எம். எஸ்.நாகலிங்கம், வி.ஜி.தினகரன், ஆர்.டி.ரமேஷ்குமார், மு.செல்வம் ஆகியோர் வரவேற்றனர். தலைமை கழக பேச்சாளர், போடி காமராஜ், கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர், எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் எம்.டி.துரை, வை.ம.அருள்தாஸ், தி.மு.தனியரசு, டி.கரிகாலசோழர், டி.ஜெகன், சி.ஆனந்தகுமார், பி. தாமோதரன், ஆகியோர் கலந்துகொண்டனர். தி.விக்னேஷ், பா.மகேந்திரன் ஆகியோர் நன்றி கூறினர்.

எஸ்.மோகன் முன்னிலை! நிலவு பூ.க. செல்வமணி தலைமை!

# முனைவர் நெல்லை அசரியாவின் நூல் வெளியீட்டு விழா!

## கவிஞர் தணிகைச்செல்வன் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மே 26-

விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு சார்பில் முனைவர் நெல்லை அசரியா அவர்களின் “தணிந்த பூமியோடு கனிந்த திராவிடம்” நூல் வெளியீட்டு விழாவும்- அவரது 85-வது பிறந்த நாள் விழாவும் நாளை (27.5.2023-சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, தியாகராயர் நகர், வெங்கட் நாராயணா சாலையில் உள்ள செ.தெ.நாயகம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறுகின்றது.

ஆறுமுகநேரி எஸ். பி.முருகேசன், சா.தேவராசு வரவேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு தி.மு.க. மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் முன்னிலை வகிக்கிறார். வழக்கறிஞர் நிலவு பூ.க.செல்வமணி தலைமை வகிக்கிறார். கவிஞர் வேளாங்கண்ணி பொன்னிவளவன், முனைவர் ஜே.வி.மோகன கிருஷ்ணன், முனைவர் அ.ரசித்கான், திரைப்பட இயக்குனர் எஸ்.டி.வேந்தன், முனைவர் எச்.இதயத்துல்லா, திராவிட இயல் மாணவர் ச.சண்முகநாதன், புரவலர் ந.இளவரசு, திரைப்பட ஒளிப்பதிவாளர் சிந்தன் கார்கி இளவேனில் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முனைவர் நெல்லை சா. அசரியா ஏற்புரையாற்றுகிறார். கொரஞ்சூர் எஸ்.முனுசாமி, அ.சாம்வேல் துரை, த.இராஜசேகர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (26-05-2023 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

**இரா.கிரிராஜன், எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18


சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.இளைஞர் அணி சார்பில்



கழக இளைஞர் அணி செயலாளர் – மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி

திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க கூட்டங்கள்

நாள் : 26.05.2023 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி



முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

1 கொளத்தூர் கிழக்கு பகுதி
இடம் : திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் கொளத்தூர்
சிறப்புரை
தமிழன் பிரசன்னா
கழக செய்தி தொடர்பு இணைச்செயலாளர்
கூட்டம் ஏற்பாடு
எஸ்.தனசேகர்
பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

2 துறைமுகம் மேற்கு பகுதி
இடம் : வரதாமுர்த்தி அப்பன் தெரு, அண்ணா பிள்ளை சந்திப்பு
சிறப்புரை
ஈரோடு இறைவன்
தலைமை கழக பேச்சாளர்
கூட்டம் ஏற்பாடு
என்.மோகன்
பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்

3 திரு.வி.க.நகர். தெற்கு பகுதி
இடம் : எஸ்.எஸ்.புரம், ஏ.பிளாக், 1வது தெரு, சரவணா திரையரங்கம் எதிரில் ஓட்டேரி,
சிறப்புரை
கோவி.செழியன் எம்.எல்.ஏ
தமிழ்நாடு அரசு தலைமை கொறடா
கூட்டம் ஏற்பாடு
பா.பி.தாஸ்
பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

4 அம்பத்தூர் தெற்கு பகுதி
இடம் : ஏசியட் காலனி கார்னர் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சிறப்புரை
கரூர்.முரளி
மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர்
கூட்டம் ஏற்பாடு
என்.பி.எம்.வசந்த்
பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

5 எழும்பூர் தெற்கு பகுதி
இடம் : அம்பேத்கர் திடல் சேத்துப்பட்டு
சிறப்புரை
பொள்ளாச்சி சித்திக்
தலைமை கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்
கூட்டம் ஏற்பாடு
சே.பாலாஜி
பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்

அன்புடன் : சி.மகேஷ்குமார்
சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்
டி.லோகேஷ் ▪ கே.கோகுல் ▪ ஆர்.எஸ்.சித்திக் ▪ ஜெ.பாலமுருகன் ▪ பா.ஜெகதீஷ்

Star Digital 044 - 43 55 48 47

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.இளைஞர் அணி